உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

இஃது

ஸ்ரீகாஞ்சிச் சித்தாந்த சிவநேசத் திருக்கூட்ட [illegible] ரும்

சைவப்பிரசாரணராகிய

வித்வான் பா. சி. முருகேசமுதலியார் [illegible] இயற்றிய

# இராமலிங்கபிள்ளைபாடல் ஆபாச [illegible] ம்

அல்லது

# மருட்பாமறுப்பு விஜயகோ [illegible] ம்,

ஸ்ரீபரமாசாரியசுவாமிகள் கட்டளைப்படி,

அருட்பா வெற்றிக் கையுறையாய்த் தந்த

திருமுறைமகோற்சவ மகாவிபவமும்

---

ஸ்ரீகாஞ்சிச் சித்தாந்த சிவநேசத்திருக்கூட்டத்தின் காரியதரிசியாகிய

டி. செ. முருகேசமுதலியார் அவர்களியற்றிய

காஞ்சித்திருமுறை மகோற்சவ நாமாவளியும்

[illegible]

Dr. U.V. SWAMINATHA IYER LIBRARY
THIRUVANMIYUR MADRAS-41

இஃது

ஸ்ரீகாஞ்சீபுரத்திலே மகாவிபவமாக நிகழ்ந்த

பன்னிருதிருமுறைத்

# திருவருட்பா விஜய சிந்தா [illegible]

மகோற்சவ தினத்தில்

---

சேயூர்

ஸ்ரீசித்தாந்த சிவநேசத் திருக்கூட்டத்தாரால்

ஸ்ரீகாஞ்சிபுரம் அச்சியந்திரசாலையில், பதிப்பித்து விநியோகித்தது.

குரோதி வருடம் தைமீ 10௳. (22-1-1905)

முதற்பதிப்பு பிரதிகள் 500.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

ஸ்ரீஞானசம்பந்தகுருப்யோநம:

# இராமலிங்கபிள்ளைபாடல் ஆபாசதர்ப்பணம்

## அல்லது

## மருட்பா மறுப்பு விஜய மகாசரபம்.

கருங்குழியென்றபெயரைச் சிதம்பரமென்று ஊர்ப்பாராட்டுச் செய்தும், உருத்திரர், விஷ்ணு, பிரமன் முதலாயினோரை மலப் புழுக்களென்று நிந்தித்தும், தகராகாசமாகிய சிதம்பரத்தைத் தூஷித்தும், வடலூர்ச்சுகொட்டையே உத்தரஞானசிதம்பரமென்றுகூறியும், தமக்குத் திருவருட்பிரகாசவள்ளலென்று சிவபெருமானுக்குரிய நாமத்தை வைத்தும், தம்பாடல்களுக்குத் தேவாராதி திருமுறைகளுக்குரிய திருவருட்பா என்னும்பெயரை வைத்தும், வேத சிவாகமங்களைப் பயனிலவென்று பழித்தும், செத்தவர்களை யெழுப்புவேமென்று கூக்குரலிட்டும் செத்துப்போன, கருங்குழி இராமலிங்கபிள்ளையினிடத்தில் அபிமானமுள்ள போலிச்சைவர்கள் சிலர் அவரைக்கடவுளென்றும், அவர் பாடல்களை அருட்பாவென்றும் சென்னையில் ஆர்வாரம்பண்ணினார்கள். அத்துவித சித்தாந்த மஹோத்தாரணரும், ஆரணிநகர சமஸ்தானவித்துவானும், மாயாவாததும்சகோளரி என்று சென்னை அரசாங்கத்தாராலும் உறுதிப்படுத்தப்பெற்றவரும், மதுரைத்தமிழ்ச்சங்கப் புலவருமாகிய யாழ்ப்பாணத்து மகாவித்வான் ஸ்ரீமாந் ந. கதிரைவேற்பிள்ளை அவர்களை விவாதிக்கவருமாறு அறைகூவினர். அவர் சென்னை, காஞ்சி, சிதம்பரம், தேவகோட்டை, திருமுருகன்பூண்டி முதலிய பலப்பல இடங்களிலுள்ள சபைகடோறும் இராமலிங்கபிள்ளை அருள்பெற்றவராகாரென்றும், அவருக்குத் திருவருட்பிரகாசவள்ளலார் என்றல் தகாதென்றும், அவரது பாக்களும் தூஷணங்களும் பொய்களும் நிறைந்த வசைப்பாடல்களுக்கு

திருவருட்பா திருமுறை என்னும்பெயர்கள் ஒருசிறிதும் பொருந்தாதென்றும் பற்பல நியாயங்களைக்காட்டி விவாதித்து, சைவத்திருக்கூட்டத்தினர் யாவர்க்கும் ஆனந்தமுண்டாகுமாறு முன்னோர் கொள்கையை நிலைநாட்டினார். அச்சபைகடோறும் எதிர்நின்றுவாதிக்கஅஞ்சியொளித்த போலிச்சைவர்களெல்லாம் கூடகூர்மம் போலப் புரளிகளையும் நிந்தைகளையுமகட்டித் தாங்கெடுவதோடு தம்மையடுத்தாரையுங் கெடுக்குமாறு சைவசித்தாந்தத்திற்கு மிக்க விரோதமான மருட்பாவைப் படிக்கத் தூண்டித் தேவாரமுதலிய திருமுறைகள் அருட்பா ஆகாதென்றும் கருங்குழியார்பாடல்களே அருட்பா ஆகுமென்றும் அஞ்சாஞ்சமயகுரவர் தங்கணக்கர் என்றும் தம்விடாப்பிடியைச் சாதித்தற்கும் பாமராலாத தும்சமோசாரி அவர்கள்மீதுவைத்த பொறுமையை நாட்டற்குமாகப் பலவாறுகூறுவாராயினார். எங்கேபார்த்தாலும் அருட்பா மருட்பா என்றசொற்களே தொனியாகின்றன.

ஸ்ரீமாந் நா. கதிரைவேற்பிள்ளை அவர்கள் பற்பலஉபந்நியாசங்களாற் கருங்குழியார்பாடல்களைக்கண்டித்துவென்றார். அன்னவரின் உபந்நியாசசாரங்கள் வெளிவருமாயின் மருட்பாவினை அருட்பாவென்றும், மருட்பிரகாச இராமலிங்கபிள்ளையை அருட்பிரகாசவள்ளலாரென்றும் மருண்டபோலிச்சைவர்கள் தெருண்டுண்மை கண்டு உய்வரென்னும் உபகாரசிந்தை கொண்டே "இராமலிங்கபிள்ளைபாடல் ஆபாசதர்ப்பணம் அல்லது மருட்பா மறுப்பு" என்னும் புத்தகத்தைச் சென்னை வேதாகமோக்த சைவசித்தாந்த சபையார் பதிப்பித்து வெளிப்படுத்தினர். அப்புத்தகத்தைக்கண்ட பற்பல வித்துவசிகாமணிகளும், உண்மைச்சைவர்களும், பரமாசாரியர்களின் பெருமை, திருமுறைகளின் அருமை மகிமையாதிய நன்குணர்ந்தேம்; திருவருட்பா என்னுஞ் சொல்லின் இயல்புங்கண்டேம் என்று குதூகலங்கொண்டார். நாளுக்குநாள் அந்நூலைக்கண்ட இராமலிங்கபிள்ளை அபிமானிகள் பலரும் சமயாசாரிய சுவாமிகளின்மீதும், தேவாராதி திருவருட்பாமீதும்

அன்புடையவராய்க் கருங்குழியாரைவெறுத்து ஸ்ரீமாந் நா. கதிரைவேற்பிள்ளை அவர்கள் பிரதிகூலமான்புடையாயினர். அதனுடன் இராமலிங்கபிள்ளை கட்சியார் என்செய்வார் பாவம்! இன்னுஞ் சில காலத்தில் நமது சுவாமிகளின் பாடல்கள் மறைந்து அழிந்துபோயி விடும் அப்புத்தகத்திற்கு மறுப்பெழுத எம்மால் முடியாதே. ஆசையாவது மறுப்பென்று எழுதுவோர்களில் அறிஞர் சிரிப்பர், மறுப்பிற்கு மறுப்பும் வரும், என்றுபேசினார். இராமலிங்கபிள்ளை என்பார் செத்தாரை எழுப்புவேனென்று சொன்னமை, பத்துக்குப்பம் கொட்டிலே பொய்ச்சத்தியம்பண்ணினமை முதலிய இவை அக்காலத்தில் உண்மையாக நிரூபித்தவையாயினும், அவற்றை இக்காலத்தில் மெய்ப்பித்தல் மிக்க கஷ்டமென்றும், வழக்குமடுத்தால் நா. கதிரைவேற்பிள்ளை அவர்கள் அநுமதித்தாங்கள் சொல்வதுபோல இராமலிங்கபிள்ளை பாடல்கள் அருட்பாவாகும் திருமுறையாகும் என்று எழுதிக்கொடுப்பாரென்றும், அதையே பலசுருதியப் பிரசித்தப்பண்ணிவிடலாமென்றும் எண்ணி, இராமலிங்கபிள்ளையின் தமையனார் மகனான சென்னை இராயபுரம் வடிவேற்பிள்ளை என்பவரைக்கொண்டு சென்னை டவுன்போலீஸ் கோர்ட்டில் சென்ற ஜூன்மீ 26உ மருட்பா மறுப்பு என்னும் புத்தகத்திலிருந்து 27 விஷயங்களை எடுத்து, அவை பொய்யென்றும் அவதூறென்றும் ஒரு வழக்குக் கொண்டுவந்தனர். அவ்வழக்கு இலக்கம் 5610.

சென்னை ஹைகோர்ட்டு வாசால நியாயதுரந்தரரும் ஆந்திர திராவிட ஆங்கில சம்ஸ்கிருத வித்வத்துடையவருமாகிய பிரம ஸ்ரீமத் வி. விசுவநாதசாஸ்திரியார் B. A , B. L. அவர்களும், பிரம ஸ்ரீமத் எம். சாமசாவ் B. A., B. L. அவர்களும் மருட்பாமறுப்பு என்னும் புத்தகத்தைப் பார்த்து அதில் இராமலிங்கபிள்ளை "சதுமறையாகம சாத்திரமெல்லாம் சந்தைப்படிப்பு, என்றும் வேதாகமங்களாற் பிரயோசனமில்லையென்றும் நிந்தித்தார் என்பதையறிந்து இப்படிப்பட்டவரா அருட்பிரகாசவள்ளலார் இவர்பாடல்களா அருட்பா என்றுவிசனித்துத்தாங்கள் இந்த வழக்கிலேற்படு

வதாகவுரைத்து வாதிக்க ஆரம்பித்தனர். குற்றமென்று சொல்லி வந்த இருபத்தேழு விஷயங்களும் இருபது விஷயங்கள் இராமலிங்கபிள்ளையின் மருட்பாவில் இருப்பதாகக் காட்டினர். வாதி வடிவேற்பிள்ளை எப்படியும் அவர்மேற் குற்றஞ்சொல்லக்கொண்டமையால் சிறியவை அவர்களும் தங்களிலிட்டு விருந்த வழுக்களையுங் குற்றப்பத்திரிகை வாசிக்கவையால் அவற்றை முடிப்பித்தல் அவசியமாயின. அவ்வெழுவிஷயங்களும் (1) போலியருட்பா மறுப்பு, (2) குதர்க்காரணிய நாசகாரமா கண்டனம், (3) அருட்பாப்பாட்டு, (4) மூர்க்கரை வாயடக்கின் முறைநாமத்தெறுதல், (5) இராமலிங்கபிள்ளை படிற்றொழுக்கம், (6) சத்தியவேதாந்தி, (7) சத்துவ விரோதி, (8) நிஜவர்த்தமானி, (9) சரித்திரமணி, (10) ஞானபானு, (11) செட்டில் பஞ்சலிச்சிலியன், (12) அருட்பாப் பத்திரிகை, (13) வர்த்தமான விமர்சினி, (14) நிசாஷ்டப் பிரகாசிகை, (15) பிரம்மவாதசமர்த்தனம், (16) பாவலர் சரித்திர தீபகம் முதலாய புத்தகங்கள், பத்திரிகைகள், விளம்பரங்கள் என்பனவும் இவைகளைக் கொண்டும், சந்நிதானங்களைக் கொண்டும், பெண்ணை யாக நடந்தனவென்றும், அவற்றிலெல்லாவற்றிலும் மருட்பா மறுக்கவந்தவர் புறங்காட்டிச் சென்றனரென்றும், சொருபவான் வெறுப்புவேண்டுமென்றது இராமலிங்கபிள்ளையவர்களே தமது தொண்டை முத்தொள்ளாயிர (1871) வெளியிட்ட அருட்பாப் பத்திரிகையாற் றெரியவருகின்றது (1871) (ஓ) தீர்த்த எழுதப் பட்டுத் தபால் ஆபீஸ் முத்திரையுள்ள கடிதமொன்றினால் உண்மையாகுமென்றும் நிரூபிக்கப்பட்டன. இவற்றுள் சொத்தவரை யெழுப்புதல் முதலாய பாட்டுகளுக்குத் தக்க பயனேற்றும் இருந்தமை ன்ற தென்பது பொய்யாயிற்றென்று சித்திரதத்தார் சேமோணித்து உறுதிப்படுத்தினர்.

இவைகளேயன்றி இராமலிங்கபிள்ளையின் செய்கைகளெல்லாம் வடலூர்மேட்டுக்குப்பத்திற் போயிருந்து நேரேபார்த்தறிந்தவர்களாயுள்ளவர்கள் பலசாட்சிகளாக உண்மை வெளிப்பிள்ளையவர்களால் அழைக்கப்பட்டனர். அவர்களெல்லாம் மிக்க கண்ணிய

முடையவர்களாகவும், சிவபக்தி, சிவனடியார்பக்திகளிற் சிறந்த வர்களாகவும் பொலிந்துதோன்றினர். அவர்களோ ஸ்ரீசிதம்பரம், திருப்பரங்குன்றம், கூடலூர், திருப்பாதிரிப்புலியூர், காஞ்சிபுரம் பாலூர், திருக்கழிசை, அயன்புரம், குத்தப்பாக்கம், கொசபுரம், திருமுருகன்பூண்டி, புதுச்சேரி, கோலியனூர், விழுப்புரம், சிக்கந்திராபாத், சென்னை முதலிய இடங்களில் வசிப்பவராவர். சைவ சித்தாந்தபானுக்கள், மகாவித்வான்கள், ஆசிரியர்கள், குருக்கள்மார், மடாதிபதிகள், பத்திராதிபர், இராசாங்க உத்தியோகத்தர், பிரசுரகாரர், ஆதீனத்தம்பிரான்மார், தர்மகர்த்தர்கள், எனப்பல திறப்பட்டவராகக் காணப்பட்டார். அச்சாட்சிகளைக்கொண்டும் இராமலிங்கபிள்ளை அருள்பெற்றவராகாரென்றும், அவர் தாமே தற்கொலை செய்துகொண்டாரென்றும், அவர்க்குத் திருவருட் பிரகாச வள்ளலாரென்னும் பெயரும், அவர் பாடல்களுக்கு அருட்பா, திருமுறை என்னும்பெயர்களும் தகாவென்றும், மற்றைய நடவடிக்கைகளாவும் புத்தகங்கள், பத்திரிகைகள், விளம்பரங்களிற்காணப்பட்டபடி புன்மையாகவுள்ளனவென்றும், தேவார முதலிய பன்னிருதிருமுறைகளே திருவருட்பா, திருமுறை என்று சொல்லுதற்குரியனவென்றும், இராமலிங்கபிள்ளை பாடல்கள் சைவ சித்தாந்தத்திற்குமாறுபட்டு விஷங்கலந்த பால்போல் இருக்கின்றனவென்றும் ருசுவாக்கப்பட்டன. மருட்பா மறுப்பைத் தாபிக்கவந்த சாட்சிகள் எல்லாம் வியந்து போற்றத் தக்கவராயினும், அவருள் சைவ சித்தாந்த மகாபீடம் மகா சற்குரு காசிவாசி ஸ்ரீலஸ்ரீ சி. செந்திநாதசுவாமிகளின் வாய்மொழிகள்கேட்டுணர்ந்திராத சைவசித்தாந்திகளுமுளரேயோ. வாதிபக்கம் சாட்சியாகவந்த மகாவித்வான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்களின் மாணாக்கரும், சென்னைப்பிரசிடென்சிகாலேஜ் தமிழ்ப்பண்டிதருமாகிய பிரம ஸ்ரீமத் உ. வே. சாமிநாதையர் அவர்கள் திருவருட்பா என்பது தேவார திருவாசக முதலியவற்றிற்குச் சொல்லவேண்டுமேயன்றி, இராமலிங்கபிள்ளை பாட்டுகளுக்குத் திருவருட்பா, திருமுறையென்றுசொல்வது தகாதென்றும், அப்

படிச் சொல்வது சம்பிரதாயவிருத்தமாகும் என்றும் நீதிஸ்தலத்தில் பெருமதிய நியாயாதிபதி முன்னிலையிற் கூறியுள்ளார். அதனைக் கேட்டமருட்பாக் கட்சிக்காரர்கள் ஆனந்தமுற்று ஆர்ப்பரித்துக்கொண்டனர். என் செய்வார்? மகாவித்வான் ஸ்ரீமத் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களும் திருவிடைமருதூர் உலா என்னும் தமது பிரபந்தத்தில் (திருவருட்பா வென்கின்ற சேர்ப்பவர்கள் பாவர்) திருவருட்பாவென்னைச் செறுமே என்று இராமலிங்கர்பாட்டைக் கண்டித்தனரே.

நா. கதிரைவேற்பிள்ளை அவர்களின் கட்சியைச் சார்ந்த வாதி பக்கத்தில் முக்கிய சாட்சியாகவுள்ள மகாவித்துவான் பிரம்மஸ்ரீ உ. வே. சாமிநாதையர் அவர்களும் சாட்சி கூறினர். உண்மை யெக்காலத்தும் உண்மையே யென்பது கண்டோம் கண்டோம் என்றனர் உலகர். என்னை வாதிபக்கத்துச் சாட்சியாலேயே ஸ்ரீமத் நா. கதிரைவேற்பிள்ளை அவர்கள் மேற்கொண்ட உண்மைநிறுவப் பட்டது மலைபோலும். அவ்வாறெல்லாம் நிரூபிக்கப்பட்டமையால் நியாயாதிபதி அவர்கள் 1904-ஆம் வருஷம் நவம்பர் 21-உ ஆகிய குரோதி ஹூ கார்த்திகைச் சோமவாரப் புண்ணியதினத்தன்று, உலகின்கண்ணுள்ள உண்மைச் சைவர்களெல்லாம் ஆனந்தசாகரத் தழுந்தா நிற்க, மருட்பாக்காரராகிய கருங்குழியார் அபிமானிகள் முகஞ்சுளித்துப் பார்முகமாக, சமயாசாரியசுவாமிகளின் திருவருட்பெருமை யிருந்தவாறென்னே, என்னே, என்று வியந்து வியந்து வந்தவர் துதிக்க, தேவாரமுதலிய பன்னிரு திருமுறைகளை நம்பினோர்க்கு ஒருவரேனும் துன்பமுறுவரோ வென்று அன்பர்களுரைக்க ஸ்ரீமத் நா. கதிரைவேற்பிள்ளை யவர்களின் மெய்யன்பு கண்டோம் கண்டோம் என்று அடியவர் கூட்டம் ஆர்க்க, இந்த உண்மைத் தீர்ப்பை யுரைத்த கனம்பொருந்திய நீதிபதி அவர்கள் வாழ்க வாழ்க நீடூழிவாழ்கவென்று ஆன்றோர்கள் ஆசிகூற வழக்கைத் தள்ளிவிட்டனர். தேவாரமுதலிய திருமுறைகளே அருட்பா ஆயின. இராமலிங்கபிள்ளைபாட்டு மருட்பா ஆயிற்று.

ஞாயவாதத்துச் சேகாரி என்றபட்டம் கீர்த்தலைத்து இராமலிங்கத் தாராலும் உறுதிப்படுத்தப்பட்டது. இம்மங்கல குருநாளைச்சுத்தி அறிந்தவுடனே ஸ்ரீசிதம்பரம், மதுரை, காஞ்சி, திருவண்ணாமலை, திருச்செந்தூர், வேதாரண்யம், இராமேச்சுரம், திருமயிலாப்பூர், திருத்தணிகை முதலிய பிரதானதலங்களிலே கோபுரங்களோறும் தீபங்களிட்டார்கள். கொடிகள் தூக்கினர், அதர்வேட்டுகள் முழங்கின. சென்னையின்கணுள்ள ஆலயங்களோறும் அபிடேகம் அர்ச்சனை, உற்சவம், தேவாரதிருவருட்பாப்பாராயணம், மகேஸ்வரபூசைகள் செய்ததுபோல ஷெ தலங்களில் அன்றி இலங்கை, பினாங்கு, சிங்கப்பூர், சிக்கந்திராபாத் முதலிய இடங்களிலும் இயன்றவியன்ற சிவதருமங்களும் கொண்டாட்டங்களுஞ் செய்யப்பட்டன. கற்கண்டு, சர்க்கரை, சிற்றுண்டிகள், நாளிகேரங்கள் வஸ்திரங்கள், பழவகைகள் முதலியவைகளும் ஆங்காங்கு வழங்கப்பட்டன. தேவார திருவாசக முதலியவைகளே திருவருட்பா என்பதும், இராமலிங்கரின்னே பாடல் மருட்பாவென்பதும் இவ்வழக்கால் உறுதியாயின. இராமலிங்கரின்னே பாடல் ஆபாச தர்ப்பணம் அல்லது மருட்பா மறுப்பு என்னும் நூலும் உண்மையுள்ள நூலாயிற்று. இவ்வழக்கிற்கு உதவிசெய்த உண்மைச் சைவர்கள்யாவருக்கும் நன்றிகூறுகின்றோம். ஸ்ரீமத் சதிரைவேற்பிள்ளை அவர்கட்கு உதவிபுரிந்த சைவசாட்டைதகப்பிரபுக்கள் ஸ்ரீ காஞ்சிச் சித்தாந்த சிவநேசத்திருக்கூட்டத்தார், யாழ்ப்பாணத்து மகாவித்வான் ஸ்ரீமத் சி. கயிலாசபண்டிதர் அவர்கள், சென்னை வேதாகமோக்த சைவசித்தாந்தசபையார், இராயபேட்டை ஸ்ரீபாலசுப்பிரமணிய பக்தஜனசபையார், புரசைப்பரசிவதமிழ் வேதபாராயணசபையார், திருவல்லிக்கேணி ஆறுமுக பக்தஜன சபையார், சென்னைச் சைவசித்தாந்த சங்கத்தார் முதலாயினோர்களின் சிவசேவையுந் திருவருட்பா ... விளங்கத்தக்கவே. இவ்விஷயங்களெல்லாம் உலகத்திற்கு ... தினமும் சிவபுண்ணியமுடையாரெவரும் பக்ஷபாதமின்றி ... பரமாசாரியசுவாமிகளின் திருவருளை வேண்டி நிற்கும் இவ்விதம் ... ரபுரியங்க.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

## மருட்பா மறுப்புவிருப்பமாக

ஸ்ரீ யாழ்ப்பாணத்தில் திருவருட்பா கஜாரோகணபவனி மகோற்சவ
த்தில் ஸற்குரு ஸ்ரீ வைதிகசைவசித்தாந்தாத்துவித சைவசித்தாந்த
பரமாசாரிய சுவாமிகள் கட்டியங்கள்.

## ஸ்ரீ திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் கட்டியம்.

1 திருஞானசம்பந்தத்தேவே - சிவஞானவமிர்துண்டகோவே
அருளைஞானமனைமயிலைக்காவே - அம்பிகைக்கன்பானபூவே

2 தோணிபுரமகராசநரையே - தூயதவகனஞானவரையே
பேரணிவரமைப்புவிக்குமுரையே - பேசரியவாழ்வுக்கோர்கரையே

3 சிவபாதவிருதயர்க்கொர்மதலாய் - திணியாணவப்பிறவிக்கொர்முதலாய்
தவபாதவருடஞ்சுதலாய் - சகமெய்ச்சித்தாந்தமுதலாய்

4 தோடுடையசெவியென்றபோதா - தோலாதவின்பமருளுந்தா
பீடுடையதமிழ்வந்தவேதா - பிரமற்குமெட்டாதபாதா

5 மங்கையர்க்கரசியிறைநேயா - மந்திரியுளத்திலமர்தூயா
சங்கரர்க்கின்பருளுமைவாயா - சங்கமாமகுருவருளுபாயா

6 பொற்றாளமொளிபெறின்றதோளா - பூம்பாவையாக்கியதாளா
கற்றோர்கடொழுமின்றதாளா - காரானைவக்காணவாளா

7 பந்தர்குடைசின்னமுறும்ராஜா - பாவையெழவருமட்டகாசா
வந்தவமறுக்கருவிநாசா - வல்விடந்தீர்த்துய்த்தநேசா

8 வுடன்றப்புனலிட்டவாழ்வே - யீரிரண்டுரைபாதமாவே
பாடருட்பாவின்மருந்தே - பரவிடற்கமையாதின்வே

9 உலவாதகிழிதந்ததிருவே - யொன்றானசித்தாந்தவுருவே
கலவாதவுலகிற்கொருகுருவே - கதியானகனிவந்ததருவே

10 சிற்பரக்கினியமகனே - திருவருட்பொழிவிந்தமுகனே
கற்பவர்க்கமுதாயமகனே - கௌணியக்குலதீபகனே

11 முத்தமிழ்ச்செழியராகமணியே - முதிர்பிணிகளைபோக்குமணியே
சத்தியத்தவஞானவணியே - தன்னேரிலாதசட்குணியே

12 பாலருவாய்கொண்டசீலா - பரசமயவரியென்றவேலா
மேலவீடளியணைக்கோலா - மெய்யர்க்கருளனுகூலா

## ஸ்ரீ திருநாவுக்கரசு நாயனார் கட்டியம்

1 திருமுனைப்பாடிவருவீரா - திருநாவுக்கரசென்றவீரா
வருமுனைப்பகைவென்றசூரா - வாழ்வானமும்முறைசெய்தீரா
2 மதமோடமறைபாடுவயமே - மருவலர்க்கிடியன்னபயமே
சதமானசைவத்தினயமே - தருமசேனர்க்கபயமே
3 சீற்றமையுமின்பானநிதியே - நெடுங்கலைப்புணையாக்குபதியே
மேற்றவர்க்கன்பானதுதியே - விடநீக்கியுயிர்வைத்தகதியே
4 திலகவதியின்வந்ததுணையே - தீயபவநீக்கருட்புணையே
கலகமில்லருளுக்கிணையே - கதவைத்திறந்தையிங்கணையே
5 உழவாரப்பணிகொண்டபொருளே - உம்பர்க்குமெட்டாததெருளே
பழகாத பரமதக் கிருளே - பாவியேமுய்யவன்பருளே
6 தாண்டகந் தந்தருள் நிருபா - தகுமறைப்பொருளானசொருபா
ஆண்டமைக்காக்கின்றகிருபா - அப்பனெனநின்றிலங்கிருபா
7 படிக்காசுவாங்குபூபாலா - பழமறைகளோலமிடுதாலா
செடிக்காமன் வெள்கவரு கோலா - திருவாரூருறுமவர்கோன்பாலா
8 அப்பூதிதன்பவைகளைந்தோய் - யருட்பாவழங்கவருமைந்தோய்
செப்புமருபூதியுளமைந்தோய் - திருவிபூதிப்பொலிவுதிந்தோய்
9 சங்கரன்பாதமதிநேயா - சாயுச்யமுற்றவொருதூயா
நங்கள்குலதெய்வசகாயா - நவிலருண்மொழிமன்னுவாயா
10 நேரிசைமலர்ந்தசிற்கனமே - நிருபனெனநின்றபொற்றனமே
பாரிசைத்தாண்டவிற்பனமே - பரவுதும்மூன்றுமுறைதினமே

## ஸ்ரீ சுந்தரமூர்த்தி நாயனார் கட்டியம்

1 சிவனூருக்கொண்டசுந்தரனே - திருமலர்த்தாமஞ்செய்பரனே
பலவிடமடக்கு செங்கரனே - பரமனுக்கொருதோழவுரனே
2 பரவையடிவளையாதமேரே - பாதியற்றா இட்டசீரே
யரன்வலிந்தாட்கொண்டநேரே - யருளியாப்புறைபெய்தகாரே
3 சங்கிலித்தொடர்கொள்குஞ்சரமே - தகுபத்தர்புகழ்வைபஞ்சரமே
எங்கிறிப்பாசமறுசரமே - யியலிசைத்தமிழ்செய்தவரமே
4 தடங்கராமுதலையழைத்தவனே - தாளுதாண்மலர்சிரத்தவனே
யடங்காதபுகழ்நிறுத்தவனே - யருட்பாவோர்முறைமலர்த்தவனே
5 வன்றொண்டநாமத்தெமண்ணால் - மணக்கோலமுற்றசீரேந்தால்
அன்றிண்டைமலர்கொய்தவள்ளால் - ஆரூரிலம்மானுக்காளால்
6 கச்சியிற்கண்பெற்றகண்ணே - சழல்சேருமன்பர்களைகண்ணே
யுச்சிதத்தொண்டர்பெறுமெண்ணே - யோங்குபரவெளியானவிண்ணே
7 வெள்ளானைமேற்சென்றவெளியே - விண்டுவுங்கண்டிடாவொளியே
பள்ளவயனெற்பெற்றவளியே - பரமதப்பஞ்சிக்குவளியே

8 திருக்கோடிக்காவிற்குற்றோய் - சீரணடியார்க்கடிப்பற்றோய்
பெருவாதைமலைவன்மைசெற்றோய் - பிராணம்பியென்றிடப்பெற்றோய்
9 வெள்ளியங்கிரியின்றுவருமுன்னே - விரியுயிர்க்குறவானவன்னே
பள்ளிக்கச்சத்திபெருமன்னே - பந்தனைசிகாமணிப்பொன்னே
10 தேவாரவாசிங்கவேறே - சிவனைவன்கட்டுரக்கூறே
நாவாரவாழ்த்துபவர்பேறே - நலமீயும்வற்றுதவாறே.

## ஸ்ரீமாணிக்கவாசகசுவாமிகள் கட்டியம்.

1 வாதவூர்தனில்வந்தபெரியாய் - மாத்தனன்மனைதிற்குமரியாய்
காதலுற்பரிகொள்ளவரியாய் - நற்பெருண்டராயிரத்துரியாய்
2 பொன்கொண்டேகன்பெற்றமலையே - பூரியர்க்கெட்டாதமலையே
நன்கொண்டமந்திரித்துலையே - நாயகன்சமுல்லைத்தலையே
3 சீராரும்வாசகத்தையா - திருக்கோவைப்பாடியருமெய்யா
பேரார்பெருந்துறையச்செய்யா - வெம்பிரானைவல்செயுமெய்யா
4 புத்தவிருளைக்குசெற்றசுடரே - புரியாதமருளறுக்கிடரே
பித்தமுகந்தவர்கூறுமொருடரே - சிலைமாணிக்கச்சுடரே
5 பிரமற்குமறியாதமுடியே - பிறைமயனைதிருவருட்குடியே
திருவற்கு மொருதிருப்படியே - செகமெலாமின்புகழும்படியே
6 அத்தவிரு சித்தாந்த குருவே - மருளகலவணைந்தமருவே
பத்துவித வியன்பிக்க திருவே - பழுதற்றயவதார வுருவே
7 இல்லையிற் சிவயோக வரையே - செறிபுரந் தலைமெய்ச்சுமுறையே
தொல்லையிற் சிக்காத துறையே - தொன்மலக் களைக்குக் கறையே
8 தென்னவன் முற்பிரமராயா - சிவைப்பொருள் முறையோதுவாயா
பன்னிடற்கரியதவநேயா - பரமனுக்கினியமெதி தாயா
9 முனைவைத்திருட்டமிறையா - முன்னிறாப்பெறும்பெருந்துறையா
சாவைகயர்க்கமைச்செய்யிறையா சந்தமுடன்றெருவெட்டும்முறையா
10 ஆலயந்தெய்விக்க நிதியே மருட்பாம்புகன்றவிடப்பதியே
மலையாத்தகெடாதகதியே வந்தருளும் மாணிக்கமதியே

---

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீகுருஞானசம்பந்தகுருவேநம:.

## காஞ்சித் திருமுறை பஞ்சரத்னாவளி.

ஸ்ரீவிநாயகர்.

மெய்யடியார் தந்தருளுமாமணியே - வைகுதெங் கலியான் தாமணியே
பாசாங்குசதா வரகரனே - பன்னிரண்டரன் கரிமுகனே
வல்லவை மணமிக மகிழ்பெந்தா - மணியெமை வந்தருள் புரியெந்தாய்
சீரார் விகட சக்கரனே - சின்மய பராபரனே வாக்கரனே
திருவருட் பாக்கள் சிறந்திடவே - மெருவருட் பாக்கள் பறந்திடவே
செய்யகுரு மணியே திருமணியே - சிற்சபைக்குருள் பெருமணியே,

## ஸ்ரீசிவபெருமான்.

கச்சியில் வாழு மேகம்பா - நிச்சலு மருள்புரி பொருநம்பா
உமையொரு பாகத் துடையவனே - உம்பரும் மால்விடை யுடையவனே
கைலாச பதியே யேகம்பா - கருணை புரிதரு நாகம்பா
கச்சப நாதன் திருவடியே - கருதுவாக வென்றும் பெருவடியே
மேற்றளி யுறையு மேலவனே - போற்றிடு மாறுமை மாலவனே
அனேகதங் காவத மார்ந்தவனே - மனைவயி னவைக விராசவனே
ஓணக் காந்தன் றளியிறையே - பாடுக திருவருட் பாவுறையே
காரைத் திருநாத வென்போமே - காணும் பழவினை பின்போமே
திருவருட் பாவுக் குரியவனே - சிறிய பாவுக் கரியவனே

## ஸ்ரீஉமாதேவி.

சாம்பவி திரிபுரை தற்பரையே - சண்முக னீன்ற திருவிற்பரையே:
பாம்பணி பைரவி யோங்காளி - காப்பவ ளிடமுறை கங்காளி
சின்மயி பூரணி காமாட்சி - சீரருள் புரிமது மீனாட்சி
குலிபு ராதனி மாதேவி - கருணை மலிந்தெனைக் காத்தேவி
புங்கவி சங்கரி பூரணியே - புண்ணியர்க் கருள்புரி காரணியே
அருட்பா வீதென வறித்தவனே - யறியாக் கடனைக் குறைத்தவனே
மங்கலை மாதவி சூலினியே - மாதுமை யாரியபரி பாலினியே.

## ஸ்ரீகுமாரக்கடவுள்.

சூரர்க்கருள் செய்திடு நாயகனே - தூய்மையிலோர்க்கரி தாயவனே
வள்ளிமணந் தருண மாமணியே - வானவர்க் கருள்புரி ஞானமணியே
தானவர் வேரறக் களைந்தவனே - வானவர்க் கருள்செய வந்தவனே
குமரகோட்ட மணியே குருமணியே - அமரர்கள் வாட்டந் தவிர்மணியே
பன்னிரு முறைகள் திருமுறையே - பகர்மறை முறைகள் பெருநிறையே
என்பது தெளிவித்த கதிரேசா - எழிலடி யலர்க்கருள் பவநாசா
கதிரைவேற் புலவனைக் காத்தவனே - தமதில் வேலினைச் சேர்த்தவனே

## ஸ்ரீசைவசமயாசாரிய சுவாமிகள்.

பிரம புரத்துச் சம்பந்தா - பேறு மெமக்கரு ளின்பந்தா
முதலாந் திருமுறை செய்முதலே - சதுமா முன்சமல் பாரிதலே
வரபுர கௌணிய குலபதியே - வரமெமக் கருடுந் தளபதியே
நாவுக்கரசெனும் பெருந்தகையே - நன்னலர்க் கினிதுன் னருட்கொடையே
வாகீசப் பெருமான் றனையே - வந்தித் தேத்திடு போம்வினையே
சுந்தர மூர்த்தி திருவடியே - தொழுதாற் போம்நம் பவமிடியே
ஆரூ ரண்டகை யற்புதனே - யற்புதஞ் செய்திடு நற்பதனே
வாதவூர் வள்ளலை வாழ்த்திடுவாம் - வாழ்த்தி நம்முடி தாழ்த்திடுவோம்
திருப்பெருந் துறையிற் சீரியனே - அருட்பெருந் துறைக்கோ ரரியனே.

## திருவருட்பா.

பன்னிரு திருமுறை யருட்பாவே - யன்னிய மறைமுறை மருட்பாவே
சீரியர் சொல்லுவ தருட்பாவே - சீரிலர் சொல்வது மருட்பாவே
தேவா ரந்தமை நாடுவமே - சிவனா ரடியிணை பாடுவமே
செந்தமிழ் வேதந் தேவாரம் - என்பது வேச தாசாரம்
நால்வர்கள் வாயமரு நற்பாவே - நல்லருட் பாவெனத் தேர்ந்திடுவீர்
பன்னிரு திருமுறைப் பாசுரமே - எண்ணிலத்தோர் கட்குமீசுரமே
அருட்பாவென்பதை யறிந்திடவே - தெரிப்பாஞ்செயக்கொடி சிறந்திடவே
வேழந் தருட்பா வெழுந்தனவே - வெறுமையர் மருட்பாவொழிந்தனவே
திருமுறை யுற்சவந் தரிசித்தோம் - தியவொ ழிந்தருள் பரிசித்தோம்
காஞ்சித் திருமுறை யுற்சவமே - நாஞ்சிவ னருள்பெறு நற்சுகமே
பன்னிரு திருமுறை வாழியவே - பகர்ந்தோ ரென்றும் வாழியவே

---

உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.

# அருட்பாவெற்றிக்கையுறை வாழ்த்து.

ஸ்ரீவிகடசக்கரவிநாயகர், ஸ்ரீகச்சியேகம்பர், ஸ்ரீகாமாட்சியம்மை
குமாரக்கடவுள் என்னுமிவர்துதி, வண்ண விருத்தம்.

ஞானமும்மத போதகன்றிடு நங்கள்கச்சியி லேயமர்
நளினமென்விழி யருளவர்ச்சனை யன்பியற்றிய மாயனூர்
நகுசுதர்சன மிடவுருந்திய மெய்யெலாம்வளை நடேசா

தானவித்தக நாயகன்மலை மங்கையின்றன மாவடு
தருகைமுன்வளை யணைதழும்பிவை யன்றியெவ்வடு வேயிலார்
தழையுமந்திர வடிவரம்மறை தந்தமாந்தரு நிழலாரே

மோனநன்மொழி யானதந்தையி னஞ்செவிக்குவை பூரண
முதியநல்லறி வினையுமெய்க்குரு முந்துகந்தனை யீன்றரு
முதல்வியன்பினை விழியினம்மையெ னிந்தநால்வரை முனுவாமே

தீனநின்றிடு ராமலிங்கன செய்யுளங்கவை யேமுறு
திருவைதந்திர மதினினையந்திடு தெவ்வழக்கவை யோடவே
திடமுறுத்தொரு பனிருமெய்ம்முறை செப்புநாட்டியவருளாலே

---

## இந்தியசக்கிரவர்த்தி, சக்கிரவர்த்தினி வாழ்த்து.

உலகமெங்குஞ் செங்கோலைப் புரிசக்ரவர்த்திமுடி யுடையேழெட்வார்ட்
னலகனலா மன்னவர்க்குங் கேசரியிந் தியதேச நலத்தா ரெல்லா
மிலகுதங்கண் மதங்காக்கப் பெருங்கருணை யிருத்தியர சியற்றுங்கோமான்
கலகமின்றி யலெக்சாண்டி ராவனையோ டெப்போதுங் கலந்து வாழி

## சென்னை நியாயதலச்சிரேட்ட நீதிபதிவாழ்த்து.

மகமதிய சாதியினி லுயர்ந்தமர பினிற்பிறந்து வண்மை சீலஞ்
சசமதிக்கு மீகைபொறை சத்தியநல் லறிவுடைமை தாமேயன்பு,
வகமதியஞ் செல்வமெலாமடைந்துதன்றன் மொழியினன்றியாங்கிலத்தோ
டிகமதிக்கு மாங்கிலமு நந்தமிழு மினிதுதெரிந் திருக்குமேத்தல்

கூடலூர்ப் பகுதிடிப்டிக் கலெக்டராயிருந்துபுகழ் கொண்டோ னத்தாற்
றேடரும்மா சாங்கமிழ்ந் தளித்தபெருங் கலெக்டரெனுஞ் சீர்த்தவேலை
யாடலாம் பார்த்தெவர்க்கு மின்புறுத்து மண்ணலெங்கள் சைவத்தோர்கள்
நீடவேசெய்ததவப் பயனாச் சென்னையினி னேர்ந்தான் யாந்தோ

யாவனெனிற் சென்னையினிற் போலிசுநீ திச்தலத்தி லிருக்குநாய
காவலருண் முதல்வன்ஆ ஜசர்டீன் உசையின் மகம்மட்கான்சாகேப்
பாவலர்கண் மெய்ச்சியிடும் பெயருடையோனுண்மைகண்டு பேதித்ததீர்ப்பை
யாவரெவர் புகழ்இல்லா ரிம்மருட்பா மறுப்பினுண்மை யிவனேகண்டான்

சைவம்போ காதிருக்க மனுவென்பா னிவ்வுருவிற் சார்ந்தான் கொல்லோ
தெய்வந்தா னின்றதுவோ திருவருட்பாச் செய்ததுவோ சீர்சால் கந்த
வையன்றான் செய்தனனோ கரிகாலன் வந்தனனோ வமைத்ததீர்ப்பால்
வையமெலாங் கொண்டாடச் செய்தவெங்க ணீதிபதி வாழிவாழி.

---

மருட்பா மறுப்பின்வாய்மைகாட்டி
யருட்பாப் பன்னிருமுறையெனவறைந்த
நியாயதுரந்தரர் நிலைமைவாழ்த்திவை

தேனைக்கா மலர்கொடருச் சித்தேத்தும் புண்ணியத்தைச் செய்தபூத
வானைக்கா வரசளித்த வருட்பிரகா சப்பெருமா னடியேபோற்றி
வானைக்காவைப்பெறலின் வைத்திலிங்க சாத்திரிமவ் வரத்தாற்பெற்றோன்
சேனைக்காவலர்மதிக்கு நன்னுணர்வான் பலமொழியுஞ்சிறப்பாக்கற்றோன்

அரசாங்கப் பிரமாண மவையெல்லாங் கரைகண்டோ னடுத்த மாந்தர்
சிரசாங்க மெனவாழக்கை மேற்கொண்டே தன்னதெனச் செறிந்த நீதிப்
பிரசாங்கம் பொழிந்துவெற்றி யுறச்செய்வோ னிறையறிவு பெறுதர்மங்
கரசாங்க வழிவற்றை யுடையவனெஞ் சிவனடியே காணுமன்பன்

செந்தமிழ் மாரியபூரக் கிராமக்கு சற்புட்டோன் செலிக்கின்பானை
சக்கரமன் சங்கீத நிபுணனெனு லாங்காத் தலத்தானை சீத்தி
யைந்தபுவித் தேவிகை காதசைச இரிகைக்கி ரேஸ்லோக் வாய்மை
யிந்தமா நிலமென்று மெக்கலையும் கொண்டாடியியல்பீற்றனே

இயந்தகருணைகுரியானமருட்பாவை மருட்பாவென் றெளிதிற் காட்டிக்
கியாவத்தோடண்டுமுறை நிருவருட்பா வெனக்கோட்டிற் றெரித்ததா
லிலைமாந்தபுக முடைமத்தையுக் கொண்டானனுவிக்கிலைமையிலைனுயப்போ [ட்டு
யனையக்கிசக்காற் மைசலைமலா யிகைற்சென்று பொருமெனல்லை மாக்கஸ்லே
[ன்றும்

கல்லூக்கேயனவெடுத்து காவிருக்கும் கைசேரச் சார்க்குதாக்கிற்
கின்னமூங்கு மிலைமபோல லைகியயிக குறைதிலை விறுமபோர் காக்க
மன்மைமூங்கு மயிற்குபெண வடர்க்குயிக மைலைவயக்கு மகிந்த குப்சி
செயல்விளங்க வெடுத்துரைத்துக் கெடக்காட்டும் வக்கீலர் சிறந்துவாழி

மங்கலூர் நகர்வாசன் வேதவிதி வழுவாத மாண்பன் வேணித்
திங்களூர் பரம்பரைற்கு நேயன்மா தவரால்செய் சேத்துகோலப்
வைசலூர் மலர்க்கமுலி வைரிமருகித்து வேலட்ட நயக்தோனேல்வர் [தோ
டுங்களையாட் டருட்பாவென் றுறுதிசெயும் பெருமையாற்சித் தகைமையோன்மா

லிந்தாம லிங்கனைன் விடையருட் பாவறக்கை வேண்டும் போது
பாந்துமா யிருந்துமிக்க சிமமுட னடக்கிவெனுழ் பரிபாலிக்க
வேந்தமொறு சாமராவ் வக்கீலென் றிருப்பாரே யாங்களெல்லாம் [தோ
காத்தங்கா ணிரும்பதைக் கவிதரன்மைடு வாழ்த்துதுமாம் களிப்பாய் மா

## மருட்பா மறுப்புசெய் நாவலன் வாழ்த்து

சமையமெழுக் கிறிப்புருத்நாற் பரசமியரும் பொருளிறப்புத் தானதேரு
மமையமெலாம் வீண்கழிய மலைகையெனப் பிறப்பழிப்ப நற்றோங்கந்த
சமையுடனு மெற்றமனு முயிரொழிய மெனப்பயந்த சோம்பர்போலா
தமைவுடனாஞ் சித்தாந்தப் பெரும்பயனிற் கதிருத்து மான்றோன்மாதோ

பொல்லாதபுத்தமே வைட்டிணவ மேகான்மம் புசன்றியாமே
பெல்லரம்லல் பிரமமெனும் பெரும்பாவ மதமிலையு மிடித்தச்சைவ
நல்லார்கள் வியக்கவைத்துக் கருணகுரியான் மருட்பாவ நசுக்கிச்சீர்த்தி
வல்லான்மெய்க் கலைவல்லான் கதிரைவே லுவலன்பேர்மலிந்துவாழி

## மருட்பாநிர்க்கந்த கிஞ்சக கண்டனப்பிரசண்டமாருத வாழ்த்து.

இருட்பா வளர்த்த விராமலிங் கன்றன்
மருட்பா மறுத்து வழங்குதாற் செய்து
அருட்பாத் தெரித்த பாலசுந் தரத்தோன்
றெருட்பா வளர்த்தொடு சிறந்துவாழியவே

## தில்லை வாழந்தணர் வாழ்த்து

ஆணையிக் குரோதியினி லாதியோக்க மற்றைநா
ளிணையிற் றிருவருட்பா வெல்லையினி---காணுடனே
மெய்புகழ்ந்திற் செய்து சந்தைமேலென் பரசங்க
மூழ்குதில்லை யந்தணர்முன் வாழ்த்து

கருங்குழியிற் பிறந்தபொல்லா மருட்பாவைப் பாடியொரு கலகமூட்டிப்
பெருங்குறும்பிற் பொய்புகன்று சிதம்பரத்திற்கெதிராகப் புதியமன்று
வருங்குழிச்சேர் வடலூரிற் கட்டியிரா மலிங்கத்தோன் வாயிற்பட்ட
மருங்குழிச்சேர் மருட்பாவென் றறிவித்தவர்க்கும் பெருவாழ்வைத் தந்தார்
[யன்றே.

ஏவரொணி லெத்தலத்து மேலாருஞ் சிதம்பரத்தி லினிதுவாழ்வார்
பாவினிலெக் கடராசப் பெருந்தகையார் முதலெடுத்த பண்பார் தில்லை
மேவினிய வந்தணர்கள் வழக்குவென்றி மிமித்தமக்கு வியப்பச்செய்த
தாவிலருந் திருவருட்பா மகோற்சவத்தின் பெருமையினைச் சாற்றலாமோ

நங்களருந் தெய்வதமா நால்வர்க்கு மபிடேக நடத்திரண்டும்
பங்கமில்பன் னிருமுறையாந் திருவருட்பா மசைடையைப் பரிவிற்பூசித்
தங்கமலத் தார்புனைந்தே நாககவாச் சவிலேற்றி யணிவாய்யாடத்
துங்கநல்லெ வீதிவலஞ் செய்தருளி யன்முறையிற் சுருங்கவிலை

அக்காலத் தகமாயன் செந்திறமர் பெருமாநிலை மகைமேலெய்தா
னிக்காலத் ததாகண்டே மென்கொதிப்பு படைமேனை செயித்தார் மார்பு
புக்கேயொ ராயிரக்கான் மண்டபத்திற் றிருவருட்பாப் பொலியும்மானை
பொக்கமுள மருட்பாவின் மறுப்புமையை பரிவித்தார் பொலிந்துவாழி

ஏழுடியாண்டிக்குவந்த வெற்றிவின்னாண்டுவை.

கதிரைவே லுருவலனைக் கண்டவுடன் முகமலர்ந்திக் காட்சி காட்டிச்
சதுரையருட் பாக்களுக்கு வைத்ததில்லை யந்தணர்சீர் சாற்றப்போமோ

பண்டரா முருகுயறப் பசருட் பாப்பொலி
வுண்டரா மலியகன துட்டுனப் பாமருள்
கண்டியா வருமுயக் காலொராம யிரமனி
மண்டபப் போதுமே வைத்துயிச் சேற்றிய
விண்டமுறு முனண்டர்சீர் வின்யியேறு வின்யியேறு

சான்றோர்க்கு நன்றோர் வாழ்த்து.

வித்தையாம் பெருங்கடலை வாய்மடுத்துத் தமிழ்கின்ற விரிக்குஞானம்
பத்திமுதற் குருவாருஞ் செந்திரைப் பெரியோன் முதலோரின்
வைத்தசீர் தில்லைமேற் காதிப்புடையும் பலர்புரின் வசந்தானன்று
பத்தமிர்து மெய்வழுவாதுக் கேட்டியனைபி பொருமுதிய பொலிகவாழ்த்து.

மகாவித்வான் ஸ்ரீமத் சி. சுவாமிநாதபண்டிதர் அவர்கள் வாழ்த்து

தேவாரமுதலாய திருவருட்பா வல்லவென்றுஞ் சிறப்பில்லாத
தாவாரும் ராமலிங்கனே நூரவனைவன்பாடல் சாற்றலாகு
காவாரா வென்றுமிங்குச் சிலபோலிச் சைவர்களே நடித்தாரத்தை
யாவராவா சகிக்காது தர்ப்பணநூல் வெளியிட்டா ரன்பாயன்றே

மறுப்பெழுதமுடியாது வழக்குவைக்கிற் றம்மானத்தின்படியே யெம்மோர்
வெறுப்பாக ராமலிங்கன் பாடலருட் பாவெனவே விள்ளாரென்றங்
கொறுப்பாக வழக்கிட்டா ரவர்தமது பொய்மையெலா மோடப்பத்தோ
டுறுப்பாகு மிருமுறையுந் திருவருட்பா வெனவொளிர வுய்த்தான்யாவன்

செந்தூர்கங் குகக்கடவு ளடிமறவாத் தலையன்பிற் சிறப்போனு
நந்தூருங் காத்தார்க்கு மறிவரிய பரம்பரன்றனலத்தஞானம்
வந்தூருமெய்யுளத்தோன் வடமொழியுந் தென்மொழியும்வரம்பகண்டோ
னந்தூரின் யாழ்ப்பாணத் தொருசார்வண்ணைப்பதியோ னருளான்மிக்கோன்

நாவலகம் பெருந்தகையார் மண்ணொருவுந் துக்கமெலா நடுங்கியோடப்
பாவலருஞ் சித்தாந்தக் காவலருந் தலைநிமிர்க்கப் பத்தியோங்கப்
பூவலயத் தோர்சிறக்கப் புலமைமிக்குச் சித்தாந்தப் பொற்பேசாட்ட
லாவலித்த நாவலனுஞ் சாமிநாதப் பெரியோ னருளான்வாழி.

## உபகாரிகளின்வாழ்த்து.

திருவருட்பாச் சிரிலக்குமித்தருமக் கியன்றபொருள் செறித்தோர்யார்க்கும்
திருவருட்பாச் சீர்சொற்றே செறிவித்தோர் முந்தியநூல் சினத்தராமன்
றெருமருட்பா மறுத்தவிளம் பரங்களுடன் பத்திரிகை சிதைவில்லாமல்
வருநிருபங் கோட்டிலளி யிவர்க்கெல்லா மென்செயுமோ மல்லன்ஞாலம்

## காஞ்சிபுரம் ஸ்ரீஏகாம்பரேச்சுரன்கோயிற்றருமகர்த்தரும், ஸ்ரீ சித்தாந்தசிவநேசத்திருக்கூட்டத்தின் சபைத்தலைவருமாகிய ஸ்ரீமான் கா. மு. சுப்பராயமுதலியாரவர்களின் வாழ்த்து.

எச்சிறப்பு முளகச்சிப் பதிவாழு மழவர்குலத் தேறுநங்க
ளுச்சிதவே கம்பன்றன் றிருக்கோயிற் றருமகர்த்த னுவக்குஞ்சீர்த்தி
யிச்சகத்தின் மிக்குள்ளோன் சமிந்தாரென் றிருக்குமெங்க ளேந்தலீகை
வைச்சகரத் தோன்புலவர் வழுத்துபா மாலைபல வயங்கப்பூண்டோன்.

அரசினர் சன்மானத்தோன் சௌரவநீ தித்தலத்தி னதிபன் மெய்ம்மைத்
தருமவழிக் குடலுயிரைத் தானளிப்போ னிவ்வழக்குச் சகாயன்யாண்டுங்
கருமமொன்றை யெடுத்தக்கா லதுமுடித்துப் பெரியவெற்றி கண்டோன்
பொருசுப்பராயவேள் முதலிப்போர்சீமானிங் குலந்தேவாழி. [மேன்மை

காஞ்சி, ஸ்ரீகச்சபாலேசுர சுவாமிகோயில் தர்மகர்த்தர்
ஸ்ரீமந் ம, த, சாமிநாத முதலியார் அவர்கள் வாழ்த்து.

நிர்சமா ரொழுகேந்துங் கச்சியினிற் குமரன்பா ரினைப்போன் கல்விக்
குர்சமா நிற்குமொரு செங்குந்தர் குலத்தில்வரு முண்மை சான்றோன்
கச்சபா லேசரன்கோ விற்றரும கர்த்தனெனக் கதித்தோ னங்கா
ணச்சியா வருந்தொழுமெஞ் சிவஞான யோகியமர் நலத்த வீட்டோன்

தணிகையான் மியமுறைத்த சதுராறுக்கு முதலிசெய்தார் தந்தோன்ற
லணிகையான் பெருமாற்கொ ரடிமைதிரு வருட்பாலி னன்போன் மிக்க
பணிகையா குடிகொண்டோ னிவ்வுழக்கிற் குதவிசெயும் பண்போருன
வணிகைமா லெனுஞ்சாமி நாதப்பேர் முதலியுக மமர்ந்தே வாழி

காஞ்சிபுரம் ஸ்ரீ சத்யஞானேஸ்வரர் கோவில் தர்மகர்த்தரும் ஸ்ரீகாஞ்சிச் சித்தாந்த சிவநேசத் திருக்கூட்டத்தின் அக்ராஸனாதிபதியுமாகிய ஸ்ரீமந், அப்பாஸாமி செட்டியா ரவர்களாதும், ஸ்ரீகாஞ்சிச் சித்தாந்த சிவநேசத் திருக்கூட்டத்தின் காரியதரிசியும், முனிசிபல் கவுன்சிலருமாகிய ஸ்ரீமந், ஏ.
அ. பாலசுந்தரமுதலியாரவர்களாதும் வாழ்த்து.

பத்திக்கோர்விதைசாந்தன்குணக்குன்றோன்திருக்கோயிற்பணியேபூண்டோன்
சத்தியனப் பாசாமிச் செட்டியெனு நலன்றோனுந் தனைவா வன்பு
வித்தைபொறை யுடையானன் முனிசிபல் கவுன்சிலன்மெய்விருப்பான்மிக்க
வுத்தமன்பா லசுந்தரனுஞ் செய்யுதவிக் கெல்லையின்றே யுவந்து வாழி

திரிசிரபுரம் ஸ்ரீதாயுமானேசுரர் கோயில்தர்மகர்த்தரும் ஸ்ரீகாஞ்சிச்சித்தாந்தசிவநேசத்திருக்கூட்டத்தின் கௌரவஅக்ராஸனாதிபதியுமாகிய ஸ்ரீமந்,நா, கங்காதர முதலியாரவர்களாதும்,நூல்மனிகை ஐ.ஓதியப்பமுதலியாரவர்களாதும், வாழ்த்து.

செவ்வந்திப் பெருமான் தருமநற் றலைமை செறிந்தவன் வாக்கினிற்சிறந்தோன்
றெவ்வந்தித் தடங்கும் பெருமையன் கங்கா தரனெனச் செறிந்தவன்றனு
மொவ்வந்த சான்றுக் குரியவ னோதி யப்பநன் முதலியுமுவந்தே
செய்வந்த நன்றி சொலுந்தரத் தன்றே சீரியர் வாழிய சிறந்தே

மாயாவாததும்சகோளரி, ஸ்ரீமந், நா, கதிரைவேற்பிள்ளை அவர்கள் மாணவரும் ஸ்ரீகாஞ்சிச் சித்தாந்த சிவநேசத் திருக்கூட்டச் சபையாருள் ஒருவருமாகிய
ஸ்ரீமந் பெ. கோவிந்தராஜ முதலியார் அவர்கள் வாழ்த்து.

நாவிந்த னவிசெலவைத் தடுமிந்தக் காஞ்சிநகர்க் கருதும் வேளாண்
மாவிந்தக் குலமணிநம் பெருமான்முன் னவன்மைந்தன் மறுவில் சீர்த்தித்
தேவிந்த னரவிந்தன் செறிநந்தன் றெரிவரிய திருக்கோ விந்தன்
நாவந்த புகழேந்த னடியுந்தன் மனம்பதித்த நலத்தோன் பாதோ

தேசன்றே வாரமுதற் றிருவருட்பா நேசனந்தஞ் சிறந்தநேயன்
வாசங்கான் மலர்த்திருவின் வாசன்யாற் றலர்காசன் வழுத்துங் கல்விப்
போசன்கோ விந்தரா சப்பெயர்ப்பா வலனிறைந்து பொருந்த பொன்மான்
மாசமுற்றீ ருதவிகட் கிங்கெனிலை யென்னவெனு வாழி மகிழ்ந்து வாழி

காஞ்சி ஸ்ரீ ஆதிபுரீசப்பெருமான்கோயிற் றருமகர்த்தரும் ஸ்ரீசித்தாந்த
சிவஞானத்திருக்கூட்டத்தின் காரியதரிசியு மாகிய
ஸ்ரீமான், பி. செ. முருகேசமுதலியாரவர்கள் வாழ்த்து.

சைவத்தோர்க் குயிரெனவுஞ் சாத்திரத்திற் குடலெனவுந் தழைப்போருநம்
மைவைத்தோர் கடிமைசெயுஞ் சிவஞானப் பெருங்கூட்டம் பதிக்கும் நேயன்
பொய்வைத்த மருட்பாவிற் கிடியன்னான் முருகேசப் புலவோன் கச்சித்
தெய்வம்போற் செயுமுதவி மறக்குமோ வையமவன் சிறந்து வாழி

முத்தி நலங்கொடுக்குஞ் சிறந்த கச்சிப்பதியிலே ஸ்ரீஏகாம்பரேஸ்வரர் கோவிலில்
ஆசாரியமூர்த்திகள் நால்வரது திருமுறைகளை யெழுந்தருளப்பண்ணி 22-1-05 ஆகிய
குரோதி வருஷம் தை மீ 10 உ ஆதிவாரதினத்தே திருவருட்பாவிஜயமகோற்சவம்
செய்த காஞ்சி ஸ்ரீ சித்தாந்த சிவஞானத்திருக்கூட்டத்தார் வாழ்த்து.

முத்தியேழ் நலங்கொடுக்குஞ் சிறந்தநா யிருங் காஞ்சியினின் மொய்குரோதி
யொத்தமா தைமதியிற் பத்திற்சேர் கதிர்வாரத் தீரமொன்று
வைத்தமுறைத் திருவருட்பா மகோற்சவத்தைத் தில்லையிற்போல் வயமாமீது
வித்தகமாச் செயுங் காஞ்சிச் சிவஞானத் திருக்கூட்டம் விளங்கிவாழி
இத்தினத்தி லுற்சவம்போற் காஞ்சியினிற் கண்டதில்லை யிசைந்தகூட்ட
மித்தினத்தி னிணைந்தார்போ லெக்காலு மியைந்ததில்லை யீராறுண
பத்தியருட் பாமகிமைப் பிரசங்க மதைப்போலப் பார்த்தோமில்லை
சத்தியங்கா ணன்பர்களே யிவையருட்பாப் பெருமையெனச் சாற்றலாமே
சோதியார் காஞ்சியினி னால்வருக்கு மபிடேகந் துதிக்கச்செய்தே
யாதியாங் கோயிலிபத் தருட்பாக்க ளேற்றுவித்துப் பவனியார்ந்து
கோதிலா யிரக்காலோர் மண்டபத்தி னருட்பாவின் மகிமைக்கோட்டி
தீதிலா தாக்குவித்துத் திருமுறையி னுற்சவத்தைச் செய்தோர்வாழி

சென்னை சிந்தாத்திரிப்பேட்டை, ஸ்ரீ அங்காளபரமேஸ்வரிகோயில் தர்மகத்தரும்
சர்ச் ஆப் ஸ்காட்லாண்டு மிஷின்பாடசாலை உபாத்தியாயரு மாகிய சி,
முனிசாமிஉபாத்தியாயர் அவர்கள்வாழ்த்து.

சென்னையினிற் சைவநலந் திகழ்சிந்தா திரிப்பேட்டை சிறக்கவாழ்வோ
னன்னையங்கா ளம்மையுறை யொருகோவிற் றருமகர்த்த னடுத்தோர்ப்போற்று
முன்னவனைச் சிவபுராணப் படனதர்ம முனிசாமிக் குரிசில் செய்த
வின்னமெனத் தொகுத்துரைக்க முடியுமோ வவன்சீர்த்தி யிலங்கிவாழி

சென்னை சிந்தாதிரிப்பேட்டை வாசரும் பன்னிருதிருமுறைத் திருவருட்பாப்
பரிபாலனசங்கத்தாரும், பே - யெக்சாமினர் ஆபீஸ்உத்தியோகத்தரு
மாகிய ஸ்ரீமத், ஆயலூர், வேதாசலமுதலியார் அவர்கள் வாழ்த்து.

ஆயலூ ருழவர்குலத் தருந்தவத்தின் பயனுருவா யடைந்தோனைப்
பாயலூர் திருமுறைக்கு முடிசூடிய மெய்ம்மையினைப் பலிப்போன்சைவத்
தாயனா ருயிர்க்குநற்று மருந்தன்னான் புலவர்பொலா மடுக்கி நோன்மைச்
சேயலூர்க் [illegible] தாங் கிளைக்குநேயன்.

பேயெக்சா மினர்க்கந்தோ ரசாங்கப் பெருப்பணியிற் பொட்பாய்ந்தபோ
னையன்மார் கழலடிக்கு மறவாத சிந்தைசெய்த நலந்தோன்றென்னைக்
காயசிந்தா திரிப்பேட்டை வாழும்வே தாசலத்தே மண்ணல்செய்த
தாயகமா நன்றிக்கோ ரளவின்றே யன்னவன்சீர் சாற்றவம்பின்.

பன்னிருதிருமுறைத் திருவருட்பாப்பத்தியினரும், அவ்வழக்கிற் சிறந்தவுட-
னுழைத்தவருமாகிய ம-ா-ா-ஸ்ரீ இராமநாதபுரம் வெள்ளையதேவர் அவர்களும்,
சிந்தாதிரிப்பேட்டைவாசரும்மதராஸ்பாங்கியுத்தியோகத்தருமாகிய ம-ா-ா-ஸ்ரீ
ஆயலூர் குமாரசாமிமுதலியார் அவர்களும், வாழ்த்து.

கட்கிமையுங் கடலுக்கோர் கரையுமெனக் கலந்துசமி களிப்பாச்செய்த
வுட்நலிலா வுளத்தோன்வெள் ளையதேவக் குரிசிலவரின் னூரின்வாழுந்
தட்பமுள சைவநலம் பரவுவிக்கு மெய்ந்நலத்தோ னையலூர்ச்சார்
நட்பினனோர் குமாரசா மிப்பெயரின் முதலோனு நாளும்வாழி.

தேவாரமுதலிய திருவருட்பாப்பத்தினரும் அரசாங்க வுத்தியோகத்தருமாகிய
சிந்தாதிரிப்பேட்டை ம-ா-ா-ஸ்ரீ சிங்காரவேலு முதலியார் அவர்கள் வாழ்த்து.

தங்கார முத்தமிழ்ப் பன்னிரு மாமுறை தமொறுஞ்சீர்த்
துங்கார முன்னருட் பாவழக் காளைச் சொல்லு மொற்றி
யிங்காரத் தந்தவர் சிங்காரவேன்முத லிப்பெயரோன்
பங்காத மற்றைய செல்வரும் வாழ்க மகிழ்ந்தென்றுமே.

சென்னைச் சபையார்கள் வாழ்த்து.

கலைமறையாகமவுத்த சித்தாந்த சபைராயப்பேட்டைநாடுந்
தலபால சுப்ரமண்ய பக்தசன சபையாருந் தரிக்குமேன்மை
வலமுத்துக் குமாரசா மிப்பெயரின் சபையாரும் புரசைவாய்ந்த
நிலவுசபை நங்கள்சைவ சித்தாந்த சங்கமதும் நின்றேவாழி.

யாழ்ப்பாணத்து வேளாளகுலதிலகரும் சைவசித்தாந்தஅத்துவிதபரிபாலனோப
காரச்செல்வரும் ஆகியதெல்லியம்பதி ஸ்ரீமந், கதிரேசப்பிள்ளைஅவர்கள்வாழ்த்து

வேளாள குலமகிபன் யாழ்ப்பாணத் தெல்லிநகர் வியனு ராளி
தாளாள னுபகாரப் பெருங்குரிசி லீகைநலஞ் சாற்றுங்கேள்வி
தேளாளுங் கருணைதனைச் சேர்ந்தவர்க்கு முயிர்கொடுக்கு மாட்சிவீரம்
நாளாளுங் கதிரேசம் பிள்ளையண்ண லூழிதொறு நயக்கவாழி.

ஸ்ரீஏகாம்பரசிவயோகிகள்மாணாக்கரும் காஞ்சிசித்தாந்தசிவநேசத்திருக்கூட்ட-
த்தின் கௌரவப்பிரசாரகரும் உரையாசிரியருமாகிய ஸ்ரீமத், கா, ஆலாலசுந்தரம்
பிள்ளை அவர்களும்பெருநகர்ப் பிரசங்காமிர்தமும் சைவப்பிரசாரணரும்
ஆகிய, வித்துவான், பெரு-இரத்தின முதலியார் அவர்களும்வாழ்த்து.

வித்துவா னாலால சுந்தரவேள் செய்ந்நன்றி
நத்துவாஞ் சைவமதை நாட்டுவான் — புத்தமிர்த
மென்னப் பிரசங்க மேற்றிரத்ந மாமுதலி
மன்னன்சீர் வாழியவே மன்.

சென்னைப்பிரபல ந்யாயஸ்தலவாசால ந்யாய துரந்தரராகிய
ஸ்ரீமத், மாசிலாமணிப்பிள்ளை பி - ஏ, பி - எல், அவர்கள்வாழ்த்து.
நிலைமண்டில வாசிரியப்பா.

திரைமணிகொழிக்கும்பெருவளம்பொலிந்த, வாரிசூழிலங்கையினவிரியாழ்ப்பா
மேழியர்குலத்துத்தோன்றியோன்மிக, ந்யாய துரந்தரனெனியோன்சிர்த்தி [ணை
யான்றாண்டேடக்குபுவிரியபிறங்கு, மாண்டகை யக்பிறுக்கோருறைமதோ
பிறையணிபர்க்குப்பெருந்தகைப்பெயரொடு, சுவாங்சாமிண்மணியென்னக்காரணைப்ப
தோலாகவின்மேலமறைந்து, மாசிலாமணியெனுமவண்மையோங்புரசை [ற்றிக்
வாசன்சகங்குபகாரிமன் புரிந்த, வுநவிகடமக்கின் கனவிலே யன்றேன்
அன்பருள்படைத்தவறத்தின்செல்வியார், பார்வதியாகனின்பொலிகவிந்திலத்
உ. [தே.

# திருவருட்பாமகோற்சவ மகாவிபவம்.

## ஸ்ரீ விகடசக்கர விநாயகர் துதி.

கருவருட்பா விளக்கமதைக் கண்டொருப்பாடுறக்குமெங்கள் கதித்தநால்வர்
திருவருட்பாமகோற்சவத்தைச்செய்யொருப்பாடுறக்கவிங்குத்தெளிக்குமாலோ
பெருவருட்பா விளக்கியக்கவிருட்பாக்கன் மருட்பாவின் விழுந்துமாளச்
செருவருட்கா விளக்கியுயர் திருட்பா வனத்திருட்பாச் செறிக்குமாவே.

## ஸ்ரீ ஏகாம்பரநாதர் துதி.

கப்பனைகள் பலக்காக்துங் கப்பனைப்போழ் கப்பனைமேட் கப்பிஞனைக்
கப்பனைவன் கந்தரப்பூங் கொப்பனையோர் பங்கனைமாக் கப்பிஞனைக்
கப்பனையொண் கன்னற்பூ கப்பனைசூழ் கப்பனையிற் கச்சியாரே
கப்பனையோர் கப்பனையாக் கப்பனையாக் கம்பெருக்கக் கண்டொழ்வார்.

வைதிகசைவ சுத்தாத்துவிதசைவசித்தாந்த பரமசந்தானாசாரிய சுவாமிகளுள் முன்னிற்பெறுக்கும் முத்தியளித்த ஸ்ரீ உமாபதி சிவாசாரிய சுவாமிகள் திருமுறைகள் பன்னிரண்டின் மீதும்வைத்த பேரன்புகாரணமாக, திருமுறைகண்டபுராணம், சேக்கிழார் நாயனார் புராணம், என்னுமிவ்விரு நூல்கள் செய்து எம்மையெல்லாந் தெளிவித்தருளினார். அவற்றுள் சேக்கிழார் புராணத்திலே ஸ்ரீ சேக்கிழார் பெருமானையும் அவரருளிய பன்னிரண்டாந்திருமுறையாகிய பெரியபுராணத்திருவருட்பாவையும் சிதம்பரத்திலே இற்றைக்குச்சுமார் ஆயிரத்துமுன்னூறு வருடங்கட்கு முன்னே யானைமீது எழுந்தருளச்செய்து அநபாய சோழமகாராசா அவர்கள் தாமே சாமரம் வீசி மகோற்சவங்

கொண்டாடினர் என்று திருவாய்மலர்ந்தருளியுள்ளார். அவ்வாறாய திருமுறைமஹோற்சவ மகாவிபவம் இன்றுங் நடக்கக்காண்பமோவென்று சிவநேயச்செல்வர்கள் இருந்தகாலை, கருங்குழி இராமலிங்கபிள்ளையின் பாடல்களை மறுத்து, தேவார திருவாசக முதலிய பன்னிரு திருமுறைகளே திருவருட்பா என நிறுவிய "இராமலிங்கபிள்ளை பாடலாபாசதர்ப்பணம் அல்லது மருட்பா மறுப்பு" என்னும் புத்தகவிடயமாகச் சென்னைநகராதிகாரநியாயதலத்திற்கொண்டுவந்தவழக்குப்பன்னிருதிருமுறைத் திருவருட்பாக் காரராகிய நங்கட்கு ஒருபெருஞ் சயமாகவும் இராமலிங்கர் கட்சியார்க்கு அபஜெயமாகவும் முடிந்தமையால் அந்தத்திருவருட்பாப் பெருவென்றிகுறித்து மேல்வருந்தலங்களிற்றிருவருட்பா மஹோற்சவங்கள் கொண்டாடப்பட்டன.

## முதலாவது திருவருட்பா மஹோற்சவம்.

சென்னை குசிலிக்கடுத்த ஸ்ரீமுத்துக்குமாரசுவாமியார் திருக்கோயிலிலே சென்ற (27—11—04) ஞாயிற்றுக்கிழமை ஸ்ரீகந்தக்கடவுளுக்கும், ஸ்ரீபரமாசாரியசுவாமிகள் நால்வர்க்கும் மகாபிஷேக அலங்கார ஆராதனஞ்செய்து தேவார முதலிய பன்னிரு திருமுறைகளையும் அலங்கரித்துப்பூசைபுரிந்து, சகலவைபவ உபசாரங்களுடன் இரத்தினவிமானத்தில் எழுந்தருளுவித்துச் சைவத்திருக்கூட்டங்களும் சபையார்களும் புடைசூழ, தேவாராதி பாராயணகோஷத்துடன் மாடவீதிப் பவனிவந்து, அவற்றின் பெருமைகளும் உபந்யாசிக்கப்பட்டன. இவற்றைச்செய்தோர் சென்னை ஸ்ரீமதானந்த முத்துக்குமாரசுவாமி பக்தஜன சபையாரும், சைவசித்தாந்த சங்கத்தாரும், சைவசமய பக்தஜனசபையாருமாவர்.

## இரண்டாவது மஹோற்சவம்.

சென்னை இராயப்பேட்டை ஸ்ரீசுந்தரேசப்பெருமான் ஆலயத்திலே (4—12—04) ஞாயிற்றுக்கிழமை மேற்குறித்தவாறு சகல விபவங்களும் செய்யப்பட்டன. இது செய்தோர் இராயப்பேட்டை ஸ்ரீபாலசுப்ரமண்ய பக்தஜனசபையாராவர்.

மூன்றாவது மகோற்சவம்.

சென்னைப் புரசைக் கங்காதரேசுரப்பெருமான் ஆலயத்திலே (18—12—04) ஆதிவாரம் ஸ்ரீகங்காதரேசுரருக்கும், பங்கசாட்சியம்மையார்க்கும், ஸ்ரீ சமயாசாரியசுவாமிகளுக்கும், மகாபிஷேக முதலியன நடத்தி பன்னிரு திருமுறைகளையும் புஷ்பப்பல்லக்கில் எழுந்தருளுவித்து மேற்கூறியவாறு நடத்தப்பட்டன. இது செய்தோர் புரசைப்பரசிவ தமிழ்வேதபாராயண சபையாராவர்.

நான்காவது யானைவாகன மகோற்சவம்.

ஸ்ரீ சிதம்பரமகாக்ஷேத்திரத்திலே காளயுக்தி வருஷம் மார்கழிமீ 10உ (14—12—04) சனிக்கிழமை யாகிய ஆருத்திராதரிசனத்திற்கு அடுத்தநாளிலே, வேத சிவாகம புராண தர்க்க வியாகரண மகாவிற்பன்னர்களாகிய தில்லைவாழந்தணர் பெருமான்களான ப்ரம்ம ஸ்ரீமத் சி- ஐ- தங்கசாமி தீக்ஷிதர் அவர்கள், ப்ரம்ம ஸ்ரீமத் சி- நா- நடேசதீக்ஷிதர் அவர்கள், ப்ரம்ம ஸ்ரீமத் சி- தண்டபாணிதீக்ஷிதர் அவர்கள், ப்ரம்ம ஸ்ரீமத் சி- கோபாலசாமிதீக்ஷிதர் அவர்கள், ப்ரம்ம ஸ்ரீமத், சிவ- தங்கசாமிதீக்ஷிதர் அவர்கள், ப்ரம்ம ஸ்ரீமத் சி- ற- பொ- குப்புசாமிதீக்ஷிதர் அவர்கள் முதலான தீக்ஷிதப்பெருமான்களால் விளம்பரமிடப்பட்டு அன்றுகாலை ஸ்ரீ சமயாசாரிய சுவாமிகளுக்கு மகாபிஷேக அலங்கார ஆராதனங்கள் செய்யப்பட்டு, அவர்களால் தேவாராதி திருமுறைகள் பன்னிரண்டினையும் அலங்கரித்துப் பூசித்து கோயில் அரசுவாவாகிய யானைபணிந்து சுவல் கொடுக்க, அதன்மீது எழுந்தருளப்பண்ணி, கொடி, குடை, சாமரம், முதலிய சர்வோபசாரங்களுடன் புறப்பட்டு, இருமொழித்திருவருட்பாக்கோஷந் திசைகடோறும் செவிடுபட மாடவீதித் திருவுலாவந்து, இராச சபையாகிய ஆயிரக்கான்மண்டபத்திலே திருமுறைகளை வீற்றிருக்கச்செய்தனர். அதன்பின் ஸ்ரீமத் நா- கதிரைவேற்பிள்ளை அவர்களைக்கொண்டு பன்னிரு திருமுறைத் திருவருட்பாமகிமை, கருங்குழி இராமலிங்கபிள்ளை செய்த சிதம்பரதூஷணம், சிவகங்கையில் விழுந்தகாலை உடம்

புந்துகிறு நினையாமல் நடராசப்பெருமானெடுத்துப் பொற்பூணணிந்தார் என்று இராமலிங்கபிள்ளையுரைத்தபொய், அவர்பாடல் திருவருட்பா, திருமுறை ஆகாதென்பது என்னுமிவ்விஷயங்கள் சுமார் ( 8000 ) எண்ணாயிரம் சிவநேயர்செல்வர்கள் மத்தியில் பலப்பல பிரமாண நியாயங்களுடன் கேட்போர் யாவரும் ஆனந்தவாரிதியின் மூழ்குமாறு பிரசங்கஞ் செய்விக்கப்பட்டது. உடனே தீக்ஷித சுவாமிகள் யாவரும் ஏனைய சிவநேயச் செல்வர்களும் உபந்நியாசகர் கூறியவெல்லாம் சத்தியம், சத்தியம், முக்காலுஞ் சத்தியமே என்று ஆனந்த முற்று பூமாலையிட்டுப் பட்டுப்பரிவட்டந்தரித்துச் சன்மானமளித்து ஆசிகூறினர். அதன்பின் ஸ்ரீநடராசப்பெருமானுக்கு அன்னப்பாவாடையாராதனம் நடத்தப்பட்டது. இதுசெய்தோர் ப்ரம்ம ஸ்ரீமத் தில்லைவாழ்ந்தணர் பெருமான்களும், மகாவித்வான், ஸ்ரீமத் சி- சுவாமிநாதபண்டிதர் அவர்களும், சிதம்பரம் அறுபத்துமூவர் குருபூசைமடம் ஸ்ரீமத், செல்லப்பதேசிகர்அவர்களும், சண்முகசுந்தரவிலாஸ அச்சியந்திரசாலைத்தலைவர் விருத்தாசலம் ஸ்ரீமந் வி- சதாசிவம் பிள்ளை அவர்களும், சிதம்பரம் தேவாரபாடசாலை உபாத்தியாயர், ஸ்ரீமந் நடராசஒதுவாமூர்த்திகள் அவர்களுமாவர்.

## ஐந்தாவது மகோற்சவம்.

தேவ கோட்டையிலே ஸ்ரீமீனாக்ஷி சுந்தரப்பெருமான் ஆலயத்திலே ( 30—12—04 ) வெள்ளிக்கிழமை அபிஷேக ஆராதனங்களும் பன்னிருதிருமுறை மகோற்சவமும் கொண்டாடப்பட்டன. இரவு ஸ்ரீமந் நா- கதிரைவேற்பிள்ளை அவர்களால் திருவருட்பாமகிமையும், கருங்குழியார்பாடல்களின் மறுப்பும் உபந்நியாசிக்கப்பட்டன. உபந்நியாஸ முடிவில் மாயாவாததும் சகோளரியாம் அவர்க்கு மாலையிட்டு பட்டுப்பரிவட்டமுதலிய சன்மானங்கள் செய்தார்கள். அவ்வுபந்நியாச மகோற்சவங்க
யநுவதித்து மகாவித்துவான் ஸ்ரீமத் சி- சுவாமிநா
அவர்கள் வியந்து பேசியபின், தஞ்சை வித்வான்-
பிள்ளை அவர்கள், உடுமலைப்பேட்டைக் கல்விச்ச
[illegible] ரபகவி- முத்துசாமி செட்டியார்

மதுரை வித்வான்- பாஷ்யம் இராமாநுஜதாசர் அவர்கள், வல்வைநகர்- கணபதிப்புலவர் அவர்கள், முதலாயினோர் பாமாலை சூட்டியதன்றி, இராமலிங்கபிள்ளை பாடலைக்கண்டித்தும் பேசினர், இது செய்தோர் தேவகோட்டை மேனுவலை ஸ்ரீமந், அரு, அரு- ராம, சோமசுந்தரச்செட்டியாரவர்கள்.

ஆறுவது சுசீருடமகோற்சவம்.

ஸ்ரீகாஞ்சிபுரத்திலே ஸ்ரீஏகாம்பரேசுரபெருமானார் ஆலயத்திலே நாளது ஜனவரி மீ 22உ ஆகிய குரோதி௵ தைமீ 10உ ஞாயிற்றுக்கிழமை ஸ்ரீசமயாசாரியருக்கும், சேக்கிழார் பெருமானுக்கும் மகாபிஷேக அலங்கார ஆராதனங்கள் செய்து தேவாரமுதலிய பன்னிருதிருமுறைத் திருவருட்பாக்களையும், கோயில் இராசகசமீது மகாலங்கார சர்வோபசாரங்களுடன் எழுந்தருளுவித்து, அந்தணர்கள், ஓதுவார்மூர்த்திகள்; திருக்கூட்டத்தார் பலப்பல சபையோர்கள் புடைசூழ வேதகோஷங்கள் விம்ம, வாத்தியங்கள், அதிர்வேட்டுகள், பாணங்களின் ஒலிகளாற்றிரைகள் செவிடுபட, இராசவீதித் திருவுலாவந்து ஆயிரக்கால் மண்டபத்திலே வீற்றிருக்கச்செய்து ஸ்ரீமத் கதிரைவேற்பிள்ளை அவர்களால் திருவருட்பாபிரபாவஉபந்நியாசம் நடத்தப்பட்டது. உபந்நியாசமுடிவிலே இராமலிங்கபிள்ளை பாடலாபாசதர்ப்பணவிசயமகாசரபம், ஸ்ரீபரமாசாரிய சுவாமிகள் கட்டியங்கள், காஞ்சித்திருமுறைமகோற்சவநாமாவளி, அருட்பா வெற்றிக்கையுறைவாழ்த்து, திருவருட்பா மகோற்சவவிபவம் என்னும் இப்புத்தகங்களை சிவனடியார்களுக்கு விநியோகிக்கப்பட்டன. உபந்நியாசமுடிவில் இவ்வழக்கு வெற்றிச்சின்னமாக மாயாவாததும்சகோளரி ஸ்ரீமந், நா, கதிரைவேற்பிள்ளை அவர்களுக்கு ஸ்ரீகாஞ்சிச்சித்தாந்தசிவநேசத்திருக்கூட்டத்தினரால் திருமுறைகயிற்றிற்செய்து அரதனம்பதித்த கௌரிசங்கர உருத்ரா நா- கதிரைவேலன்மானஞ்செய்யப்பட்டது.

முறைத் திருவரு
செய்த சிதம்பரது

11137 (67.4)

முற்றிற்று.